# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.134/2016 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.3 |
| Name | : | **ராயப்பன்** |
| Father's/Husband Name: | | **கோதண்டராமன்** |
| Village | : | **சிலோன் காலனி, கீழப்புலியூர்** |
| Taluk | : | **குன்னம்** |
| Age | : | 33/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.10.2021

**முதல் விசாரணை**

நான் கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவர்களை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு புகார்தாரரை எனக்கு தெரியும். அவர் 1-வது எதிரி தேவியை ஸ்ரீரங்கத்தில் இரு வீட்டார் சம்மதத்தின் பேரில் திருமணம் செய்தார்கள். அந்த திருமணத்திற்கு நான் சென்றேன். திருமணம் முடிந்து இருவரும் சிலோன் காலனியில் குடியிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. பின்னர் சிறிது காலம் கழித்து புகார்தாரர் வேலை செய்வதற்காக வெளிநாடு சென்று விட்டார். அவர் சென்ற பிறகு 1-வது எதிரி தேவியை மணப்பதற்காக அவரது அண்ணனும், 2-வது எதிரி அடிக்கடி சென்று அங்கு வந்து பார்ப்பார்கள். பின்னர் 1-வது எதிரி, 2-வது எதிரியுடன் ஓடி சென்று திருமணம் செய்து கொண்டார். பின்னர் புகார்தாரர் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு 1-வது எதிரி செயலை பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் 1-வது எதிரியை அழைத்து விசாரணை செய்தார். அவரை விசாரணை செய்த போது நானும், அய்யாதுரை என்பவரும் மற்றும் ஊர்காரரும் இருந்தார்கள். போலிசார் விசாரணையில் 1-வது எதிரி இந்த உண்மைகள் அனைத்தையும் எங்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் எழுதிகொண்டு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னுடன் குணசேகரன் என்பவரும் கையெழுத்து செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து அ.த.சா.ஆ.2 ஆகும்.

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் எனது உறவினர் இல்லை ஊர்காரர். காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதன் பேரில் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். 1,2 எதிரிகள் திருமணம் செய்து கொண்ட விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது . திருமணம் செய்து கொண்டதாக கேள்விபட்டேன். புகார்தாரர் ஒரே ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எழுதிய பேப்பரில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar | : | CC. No.134/2016 |
| Miscellaneous | : | |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.4 |

| | | |
|---|---|---|
| Name | : | **குணசேகரன்** |
| Father's/Husband Name: | | **பெரியண்ணன்** |
| Village | : | **சிலோன் காலனி, கீழப்புலியூர்** |
| Taluk | : | **குன்னம்** |
| Age | : | 62/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.10.2021

**முதல் விசாரணை**

நான் கீழப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் இன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. அவர்களை எனக்கு தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையெழுத்து என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு புகார்தாரரை எனக்கு தெரியும். அவர் 1–வது எதிரி தேவியை ஸ்ரீரங்கத்தில் இரு வீட்டார் சம்மதத்தின் பேரில் திருமணம் செய்தார்கள். அந்த திருமணத்திற்கு நான் சென்றேன். திருமணம் முடிந்து இருவரும் சிலோன் காலனியில் குடியிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. பின்னர் சிறிது காலம் கழித்து புகார்தாரர் வேலை செய்வதற்காக வெளிநாடு சென்று விட்டார். அவர் சென்ற பிறகு 1–வது எதிரி தேவியை மணப்பதற்காக அவரது அண்ணனும், 2–வது எதிரி அடிக்கடி சென்று அங்கு வந்து பார்ப்பார்கள். பின்னர் 1–வது எதிரி, 2–வது எதிரியுடன் ஓடி சென்று திருமணம் செய்து கொண்டார். பின்னர் புகார்தாரர் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு 1–வது எதிரி செயலை பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலிசார் 1–வது எதிரியை அழைத்து விசாரணை செய்தார். அவரை விசாரணை செய்த போது நானும், ராயப்பன் என்பவரும் மற்றும் ஊர்காரரும் இருந்தார்கள். போலிசார் விசாரணையில் 1–வது எதிரி இந்த உண்மைகள் அனைத்தையும் எங்கள் முன்னிலையில் ஒப்புக்கொண்டார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலிசார் எழுதிகொண்டு ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து வாங்கி கொண்டார். என்னுடன் குணசேகரன் என்பவரும் கையெழுத்து செய்தார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2–வது கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆகும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

புகார்தாரர் மற்றும் அ.சா.3 ராயப்பன் எனது ஊர்காரர் என்றால் சரிதான். நானும் ராயப்பனும் பெயிண்டர் வேலை செய்கிறோம் என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். அதில் உள்ள விவரம் தெரியாது என்றால் அவர்கள் ஓடி போன விவரம் தெரியும் மற்ற விவரம் தெரியாது. புகார்தாரர் எனது ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.